Kavignan

# கவிஞன்

## மாதாந்தக் கவிதைச் சிற்றிதழ்



உருவத்தை முக்கியப்
படுத்துகின்ற மரபுத் தன்மையும்
உள்ளடக்கத்தை
முக்கியப்படுத்துகின்ற
புதுக் கவிதைப்போக்கும்
இன்று கவிஞர்களை
இரு துருவங்களாக்கியிருப்பதைப்
பார்க்கின்றோம்.
உண்மையில் இதன் விளைவு
கவிதைக்குள் இழப்பையே
ஏற்படுத்துவதாகக்
கொள்ளவேண்டும்.

கலாபூஷணம். கவிஞர்.வெல்லவூர் கோபால்

இதழ்-019 புரட்டாதித்திங்கள் 2011

விலை-20/=

Kavignan
கவி ஞன்

வணக்கம்,

இதுவரை காலமும் கவிஞன் சிற்றிதழுக்கு நீங்கள் வழங்கிய பேராதரவுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதில் மனமகிழ்ச்சி கொள்கின்றோம். தொடர்ந்தும் இதே ஆதரவைத் தங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

அனேக வாசகர்களின் நீண்டநாள் வேண்டுகோளுக்கிணங்க அடுத்துவரும் இதழ்கள் அனேக மாறுதல்களுடன் வெளிவர இருக்கின்றது என்பதையும், மாதாந்தக் கவிதைச் சிற்றிதழாக வெளிவந்துகொண்டிருந்த கவிஞன் சிற்றிதழ் அடுத்த இதழ் தொடக்கம் காலாண்டுக் கவிதை இதழாகவே மலரவிருப்பது கவலைக்குரியதாக இருப்பினும் வடிவத்தில் ஏற்படும் மாற்றம் நிச்சயமாக வாசகர்களாகிய உங்களை திருப்திப்படுத்தும் என்ற நம்பிக்கையில் தொடர்கின்றோம்.

மேலும் கவிஞர்களுடைய கவிதை ஆக்கங்களுடன், வளர்ந்து வரும் இளங்கவிஞர்களுக்குப் பயனுடையதான கவிதை விமர்சனக் கட்டுரைகளையும் கருத்துக்களையும் நூல் விமர்சனங்களையும் எதிர்பார்க்கின்றோம்.

நன்றி

அன்புடன்

ஆசிரியர்

Kavignan
கவி ஞன்
தோற்றம்: 27. பங்குனி. 2010
கவி ஞன்
19
புரட்டாதி 2011

ஆசிரியர் : சதாசிவம் மதன்
தொ.பே : 0094 77 3620328
0094 65 3650153

முகவரி : கூட்டுறவுக்கடை வீதி,
புதுக்குடியிருப்பு
30158
இலங்கை.

மின்னஞ்சல்: kavignan@live.com

இணையத்தளம்:www.kavignan.com

## உள்ளேஉள்ள படைப்பாளிகள்

கவிஞர்.வெல்லவூர் கோபால்
திருக்கோவில் கார்த்திக்
அன்புமணி
ரஜிதரன்
கவிஞர்.அக்கரைச் சக்தி
பொ.புண்ணியமூர்த்தி
சிற்றரசு
நே.நேசப்பிரியன்
கலைநாதன் ஜெயகணேஷ்
மடுல்சீமை மைந்தன்
மதன்

## சிந்தனைக்கு...

"இன்று சமூக வாழ்க்கையின் கதி, அதன் ஓசையமைதி, மாறிவிட்டது. யாப்புக்கும் வாழ்க்கைக் கதிக்கும் தொடர்புண்டு. வாழ்க்கையில் பெரும் பிழவுகள் . மரபு மாற்றங்கள் ஏற்படின் யாப்பிலும் அது தெரியவரும். நவீன யுகத்தின் தேவைகளைக் கவிதை வடிவத்திற் பிரதிபலிப்பதற்குப் புதிய ஒலியமைதி வேண்டும். இந்தப் புதிய ஒலியமைதிகளை இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் மேனாடுகளிலும் காண்கின்றோம். இத்தகைய ஒரு பாரம்பரியப் பிறழ்வு ஏற்பட்டதன் விளைவாகத்தான் செவிப்புல மாத்திரையாகப் பயின்ற செய்யுள் கட்புல மாத்திரையாகப் பயிலும் புதுக்கவிதையாகிற்று

*பேராசிரியர்.கார்த்திகேசு சிவத்தம்பி*

# தமிழ்த் தாயின் சொத்து நீ



மூத்த இலக்கிய முத்தே!
அன்று உன் பிறப்பு
தமிழுக்குத் தனிச் சிறப்பு
இன்று உன் இறப்பு
பேரிழப்பு தமிழ் உலகுக்கு
நன்று உன் தமிழ் வளர்ப்பு -நீ
ஏற்ற தலையான பொறுப்பு.

சலிப்பு ஒதுக்கித் தமிழ் செதுக்கி
மொழி வழர்த்த செழிப்பு - நீ
செம்மொழி மாநாடு கண்ட சொல் நெருப்பு
புதுக் களிப்பு பூக்க பூத்த மணப் பூ நீ
தமிழ் உலகின் காயாத வனப் பூ நீ
தமிழின் இதயம் நீ
இலக்கிய ஆய்வில் வின்னன் நீ
விழுமியங்களின் வெளிச்சம் நீ
பேராசான் நீ தமிழ் ஆசான் நீ
காலத்தால் மறையாத கதிரவன் நீ
என்றும்....
எம் எண்ணம் நீ
சொல் வண்ணம் நீ
தமிழ் மண்ணின் சொத்தும் நீயே!

திருக்கோவில் - கார்த்திக்



# இம்மாதப் பிரபலம்

## கவிஞர்.வெல்லவூர் கோபால்

முழுப் பெயர் : சீனித்தம்பி கோபாலசிங்கம்
புனைபெயர்கள் :வெல்லவூர்க் கோபால் (இலங்கை),ஈழக்கவி (இந்தியா)
பிறந்த திகதி : 07.11.1945
தொடர்புமுகவரி : 143/23,எல்லைவீதி, மட்டக்களப்பு

*அவரின் கவிதைத்துறைப் பிரவேசம் பற்றி கேட்டபோது......*

"ஒருபடைப்பாளியை அவன் வாழும் சூழலும் காலமும் தான் உருவாக்குவதாக நான் கருதுகின்றேன். பச்சை வயல் போர்த்திய என் அழகிய வெல்லாவெளிக் கிராமம், தினமும் அதனைக் குளிப்பாட்டும் பூவல் ஆறு (நாதனையாறு) எனும் என் கிராமத்து ஜீவநதி, பெரும்பாலும் அன்றாடம் உழைத்து வாழ்ந்த கள்ளம் கபடம் அறியாத பாமரத் தன்மை கொண்ட என் கிராமத்து மக்கள் அவையே என் சிறுபராயப் பங்காளிகள். என் இதயத்துள்ளே ஆரம்பக் கசிவினை இவையே ஏற்படுத்தியதாக நான் உணருகின்றேன். நான் ஐந்தாம் வகுப்புப் படித்தக்கொண்டிருந்தபோது புலவர்மணி ஐயாவின் "இலங்கை மணித்திருநாடெங்கள் நாடே..." என்ற பாடலை மாற்றியமைத்து "வெல்லாவெளியதென்பதெங்கள் ஊரே..." எனப் பாடிமகிழ்ந்த அந்தப் பசுமையான நினைவுகள் இன்றும் நிழலாடுகின்றன. நான் வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் எட்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த பொழுது வீரகேசரியில் எனதுமுதல் கவிதை வெளிவந்தது. அதுவும் எனதுகிராமம் பற்றியதாகவே அமைந்திருந்தது. உள்ளத்தின் வெளிப்பாடாகக் கவிதை இருப்பதால் நான் எழுதும் கவிதைகளுக்கென எந்த வரையறையையும் கைக் கொள்ளவில்லை. உண்மையைச் சொல்லப் போனால் கவிதைக்கான இலக்கணத்தைப் படித்துவிட்டு நான் கவிதை எழுதவரவில்லை. இதுவரையில் ஈழத்திலும் தமிழகத்திலும் 600க்கும் மேற்பட்ட எனது கவிதைகள் வெளிவந்திருக்கின்றன. பேராசிரியர். கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் ஒரு ஆய்வுக் குறிப்பில் எனது கவிதைகள் ஓத்திசையோட்டமுள்ள மரபுநிலைச் செய்யுள்கள் என்றும் இதனை 'நோக்கு' எனத் தொல்காப்பியம் விழிப்பதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார். தமிழகத்தின் பெரும் கவிக்கோ மீரா என்னை ஒரு மரபுக் கவிஞனாகவும் புதுக் கவிஞனாகவும் பார்த்திருக்கின்றார் எது எப்படியிருப்பினும் இப்பேறிஞர்கள் என்னை ஒருதமிழ்க் கவிஞனாக அங்கீகரித்துள்ளமை மன நிறைவைத் தருகின்றது."

## இதுவரை கவிதை எழுதிய அச்சு ஊடகங்கள்

இலங்கை

வீரகேசரி,தினகரன்,தினபதி,சிந்தாமணி,சுதந்திரன்,கிழக்கொளி மற்றும் பல சஞ்சிகைகள் சிறப்பிதழ்கள்

இந்தியா

தினபூமி,தினகரன்,தினமலர்,ஆனந்தவிகடன்,ராணி,குங்குமம்,பூபாளம்

இலத்திரனியல் ஊடகங்கள் :

ரூபவாஹினி (இலங்கை), இலங்கை வானொலி, கோவை வானொலி

## இதுவரை எழுதி வெளியிட்ட நூல்கள் :

01. கன்னிமலர் (கவிதைகள்) - 1964
    (சாகித்திய மண்டலச் சிறப்பு விருது - இளைஞர் பிரிவு)
02. முல்லை (குறுங்காவியம்) - 1968
03. ஒரு கண்ணீர்க் காவியம் - 1972
04. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் - 1992
    (கலாசார அமைச்சின் அறநெறி விருது)
05. முற்றுப்பெறாத காவியம் - 1995
    (வடகிழக்கு சாகித்திய விருது - கவிதை இலக்கியம்)
06. இதய சங்கமம் (கவிதைகள்) - 1998 (இந்தியா)
07. நெஞ்சக் கனல் (காவியம்) - 2002 (இந்தியா)
08. தமிழக வன்னியரும் ஈழத்து வன்னியரும் (ஆய்வு) - 2003
09. சுனாமி ஒரு மீள்பார்வை (அறிவியல்) - 2005
10. மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம் (ஆய்வு) - 2005
    (வட கிழக்கு சாகித்திய விருது)
11. மலையாள நாடும் மட்டக்களப்பும் (ஆய்வு) - 2007
12. வெல்லவூர்க் கோபால் கவிதைகள் - 2009
13. முழுமை பற்றிய சிந்தனைகள் (தத்துவம்) - 2009
14. கண்ணீரால் எழுதுகின்றேன் (இரங்கல்) - 2010
15. கிழக்கிலங்கை வரலாற்று இலக்கியங்கள் - 2011

மறுபதிப்பு: திருத்திய 3ம் பதிப்பு மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம் - 2011

தொடர்ச்சி பக்கம் 14 இல்...

# ஹைக்கூ பாடல்களில் கவிதையுண்டா?

செய்யுள்கள், பாடல்கள் என்பன உடல்கள். இவற்றில் பொதிந்திருக்கும் ஜீவனே கவிதை. அதை எப்படி உணரலாம்? சொல்லில், பொருளில், உவமையில், உருவகத்தில் அது வெளிப்படும்.

ஹைக்கூ என்ற ஆக்கம் ஜப்பானில் இருந்து இறக்குமதியானது ஆனால் அதில் கவிதை பூச்சியம். ஹைக்கூவாக இருந்தாலும் குறளாக இருந்தாலும் அதில் கவிதை வெளிப்பட வேண்டும். தேவார திருவாசகங்களில் கவிதை கொப்பளிப்பதைக் காணலாம் திருக்குறளில் கவிதை கொப்பளிப்பதைக் காணலாம், கண்ணதாசன் பாடல்களில் கவிதை கொப்பளிப்பதைக் காணலாம். சில உதாரணங்கள் இதோ...

*மண்ணில் வந்த நிலவே -என்*
*மடியில் பூத்த மலரே !*

குழந்தை பற்றிய இப்பாடலில் கவிதை பளிச்சிடுகின்றதல்லவா?

*நிலவு ஒரு பெண்ணாகி*
*உலவுகின்ற அழகோ!*
*நீரலைகள் இடம்மாறி*
*நீந்துகின்ற குழலோ!*

நீராடும் பெண்ணைப்பற்றிய இப்பாடலில் கவிதை கொப்பளிக்கின்றது அல்லவா? (உவமை)

*"“தோடுடைய செவியன் விடை ஏறியோர்*
*தூவெண் மதிசூடி*
*காடுடைய சுடலைப் பொடி பூசியென்*
*உள்ளங்கவர் கள்வன்”"*

இத் தேவாரம் முழுவதுமே உவமை, உருவகம் முதலியவற்றால் கவிதை கொப்பளிக்கின்றது அல்லவா?

*“அகர முதல எழுத்தெல்லாம், ஆதி*
*பகவன் முதற்றே உலகு”*

இக் குறள் வடிவமைப்பில் கவிதை நிறைந்துள்ளது இவ்வாறான கவிதை ஹைக்கூவில் வெளிப்படுமா?

-அன்புமணி-

விலையில்லாத அங்கங்கள்
பொருத்திய சரீரம்
விற்கப்படும் இடம்
விபச்சாரம்

*ரஜிதரன்*
*ஆரையம்பதி*

உன் உயிரில்
உன் மனதில்
உன் கனவில்
உன் நினைவில்
உன் அன்பில்
உன் இதயத்தில்
யாரும் இருக்கலாம்
ஆனால்
யாரும் இல்லாத போது
நான் மட்டும் இருப்பேன்
ஒரு
நல்ல நண்பனாய்

உண்மை சொல்லக் கண்கள்
பொய் சொல்லப் பெண்கள்
அதை நம்ப ஆண்கள்
உண்மை சொன்ன கண்களோ
சிறை அறையில்
பொய் சொன்ன பெண்களோ
மண அறையில்
நம்பிய ஆண்களோ கல்லறையில்

# தமிழ் வாழ்த்துப் பாடல்

கவிஞர் அக்கரைச் சக்தி

கடலாய்ப்பெருகும் கலைகள் ஒளிரும்
சுடரான தமிழ்மகள் வாழ்க!
அழகே! அருளே! தேனமுதே!-எம்
ஆருயிரே நீ வாழ்க!

நெடுவான் அளவும் நிமிரும் இமய
நீலமலைத்தொடர் போலே
திடமாய் உலகில் திகழும் மொழியே! செந்
தமிழே புகழே வாழ்க!
மடமானே!மரகதமே நீ!-நிலை
மாண்புற என்றும் வாழ்க!- கடலாய்---

இனமுன் உணர்வால் இயல்பாய் நிலையாம்
இன்பமடைந்திடுமே!
மனமாமணியே!வளமே தமிழே! வழி
பாடுசெய்தோம் நீ வாழ்க!
அணையாதஜோதி வாழ்க!-இந்த
அகிலம் உயர்ந்திட வாழ்க!-கடலாய்--

# மாதமொரு கீதம்

**இம்மாதக் கீதம் :**

**கல்குடா நாமகள் வித்தியாலயம்**

**இயற்றியவர் :**

**திரு.பொ.புண்ணியமூர்த்தி**

வாழ்க என்றும் வாழ்க
வாழ்க நன்று வாழ்க
நாங்கள் கற்கும் ஆலயம்
நாமகள் வித்தியாலயம்
இலங்கை நாட்டின் கிழக்கிலே
மட்டு நகரின் வடக்கிலே
மீனும் இறாலும் தேங்காயும்
நானிலத்தோர் களித்திடும்
கல்குடா கிராமத்தில்
அமைந்த தெங்கள் ஆலயம்
.....................................(வாழ்க என்றும்)

களைப்பு நீங்கிக் குளித்திட
காற்று வாங்கிக் களித்திட
அமைதியான கடற்கரை
அழகு காட்சி நிறைந்திடும்
கல்குடா கிராமத்தில்
அமைந்த தெங்கள் ஆலயம்
.....................................(வாழ்க என்றும்)

தமிழ் மொழியுடன் ஆங்கிலம்
தகுந்த சமயம் கணிதமும்
வாழ்க்கை நெறியும் கலைகளும்
ஆக்கமழகு ஞானமும் – நாங்கள்
கற்றுத் தேர்ந்திடும்
நாமகள் வித்தியாலயம்
.....................................(வாழ்க என்றும்)

உண்மையான நேர்மையும்
உள்ளவராய் வாழவும்
ஒழுங்கான நிலையிலே
ஒற்றுமையாய் வாழவும்
கீர்த்தி மிக்க குரவரை
கீழ்ப்படிந்து வாழவும்
கல்வி அறிவு தந்திடும்
நாமகள் வித்தியாலயம்
.....................................(வாழ்க என்றும்)

# ஏழையின் மூலதனம்



இறைவனது பெயராலே
தூண்டில் போடுறார் – எங்கும்
மறைநூலை மார்பணைத்து
மாதர் அலைகிறார்
கறைபடிந்த தரகர்களின்
கையில் செல்வமோ – வந்து
முறைதவறிப் புரள்கிறது
நீதியாகுமோ?


கேட்டுப் பார்த்தால்
கேசவன் கிருபை என்கிறார் – மேலும்
கேள்விஞான மில்லாதோர்
விதியே என்கிறார்!
பாட்டு வாய்த்தா கிழவி கூடப்
பாடி மகிழ்வர் – இதைப்
பார்க்கையிலே பகுத்தறிவு
இடந்த ரல்லையே!

அறிவு வசதி இல்லாரைக்
காட்டி உழைக்கவே – இவர்
அறமெனக் கூறி அணிக்கு
ஆட் சேர்க்கிறார்
நெறி என்ற போர்வையிலே
தரகர் கூடியே – எமது
நிலையான அன்பறத்தை
அழிக்கச் செய்கிறார்.

ஏழைகளின் மூலதனம்
உடல் உழைப்புதான் – அதை
எவர்க்கேனும் விற்றேதான்
உயிரே வாழலாம்
நாளைக்கெனச் சேமிக்க
ஒன்றுமில்லையே – இவர்
நலிவை நீக்கிக் கை கொடுக்க
யாருமில்லையே!

ஊட்டுக்குள்ளே இருந்தபடி
ஊழையிடுகிறார் – ஏழை
ஊனுடலின் உழைப்பாலே
உண்டு மகிழ்கிறார்
நாட்டுக்குள்ளே சமூகமைப்பு
இந்த முறையிலே – இதை
நாம் யார்தான் மாற்றுவது
துணிந்த நிலையிலே!

சிற்றரசு
தமிழ்நாடு




இயற்கையின் படைப்பில்
இவளும் ஒருத்தி
பெண்ணின் கூந்தல் போல்
எங்கு பார்த்தாலும்
விரிந்து கிடக்கிறதே
உன் நீலக் கூந்தல்

காலையில் கதிரவன்
காகிதமாய் உன் தலையில்
மாலையில் மயக்க மலரும்
பூ ஒன்று - அதுதான்
வெண்ணிலா

வானில் மிதக்கும்
மின்மினிப் பூச்சிகளாம்
அந்த நட்சத்திரம்

உலகை நினைத்து
உருகித்தவித்து
அழுகிறதே வானம்
ஓ... அதுதான் மழையோ?

இந்த ஜென்மம் மட்டுமல்ல
எந்த ஜென்மத்திலும்
உந்தன் அழகுக்கு
அணைகட்ட முடியாது

நே.நேசப்பிரியன்
தரம் - 10 (கே)
மட்-விபுலானந்த வித்தியாலயம்

# வெண்ணிலவு...

கலைநாதன் ஜெயகணேஷ்
இல:10
கோவிந்தன் வீதி
திருக்கடலூர்
திருகோணமலை

வெண்ணிலவு...
எத்தனை கவிகளால்
எத்தனை கவிகள் பாடப்பட்டாயிற்று..
அழகின் வர்ணனைகள் எல்லாம்
உன்னைச்சுற்றித்தானே வட்டமிடுகின்றன...
மனிதனின் முதல் ரசனை
உன்னிலிருந்தே ஆரம்பித்திருக்கும்...
உலகின் அத்தனை மாற்றங்களினதும்
மொத்த சாட்சியம் நீயாய்த்தானே இருப்பாய்....
எத்தனை இரகசியங்கள்
நீமட்டுமே அறிந்திருப்பாய்...
எத்தனை அழகுகளுக்காய்
நீ உவமை ஆகியிருப்பாய்...
ஆனாலும் அலட்டவில்லை...
நீ.. நீயாகவே இருக்கின்றாய்..
ஆதலால்... புத்தருக்கு போதிமரம்....
எனக்கு? நீ... வியப்பதற்கில்லை?
அறிவியல் சொல்லும்...
பூமியின் சிதறல் என்றும்...
பசிபிக் ஆழியில் உண்டு
உனது பள்ளம் என்றும்...
காற்றில்லா கோள் என்றும்...
மனிதனின் வாழ்வுக்காய்
பொருத்தமற்ற கிரகமென்றும்...
உன்னில்? நடப்பவன் பாய்வானென்றும்...
உன் ஒருபக்கம் மர்மம் என்றும்...
பல நூறு செய்திகளை
அறிவியல் கண்டுசொல்லும்...
சொல்லட்டுமே... அதனாலென்ன...

மழலையில்...
அம்மாஇடையில் நானிருக்க...
இரவுப்பொழுதுகளின்...
உணவூட்டும்வேளைகளில்
எம்முற்றத்தில் நின்றபடியே...
உன்னில் ஒருபாட்டி இருப்பதாய்
கதைகள் சொல்ல
அழகாய் இரசித்து வியந்தேனே..
இப்போது கூட...
உன்னை காணும் இரவுகளில்...
மாற்றமின்றி தெரிகின்றது
அந்த பாட்டியின் உருவம் அப்படியே
பசுமையாய்..

# படும் பாடு

மடுல்சிமை மைந்தன்

ஆத்துக்கு அந்தப் பக்கம்
அங்காயி வீடு
அம்மாடி அவளோட
பாடு பெரும் பாடு.

பெண்பிள்ளை ஆண் என்று
பேருக்கு ரெண்டு பெத்து
இன்னிக்கு வரைக்கும்
எப்படியோ வளர்த்திட்டா

போன முறைகொடுத்த
போனஸ் மீதியில
புருஷன் ஓடிப்போயி
போன் ஒன்று வாங்கிட்டாரு

புதுவருஷம் பொறந்திருச்சு
புதுத்துணி வாங்க வேணும்
பிள்ளைகளின் படிப்புக்கு
பேனா கொப்பி வாங்க வேணும்

ஆண்டு ஐந்து படிக்கின்ற
அங்காயி மகன் ஆனந்து
ஆயிரத்து ஐந்நூறு கேட்டு
ஆறு நாளாய் அடம்பிடிக்கிறான்

வேலைக்குப் போயிட்டு
மாலையில வந்த மச்சான்
நாலுகாசு தேடிவர
நாட்டுக்குப் பொயிட்டாரு

பத்தாந்தேதி பார்த்தீங்கன்னா
பல பேரு வந்து நிற்பா
பஞ்சம் போக்க பெற்ற சம்பளத்த
பறிச்சிக்கிட்டு போவதற்கு

சேர்ந்து உழைச்சாலும்
சில்லறை மிஞ்சுதில்ல
காய்ந்து கருகினாலும்
காசு போதவில்லை

என்ன செய்யனுன்னு
எனக்கின்னும் தோணவில்ல
கருமாரி கோயில் போய்
காணிக்கை கட்டப் போறன்

சீரழிச்ச பெரியவங்க
சீக்கிரமே தொலைய வேணும்
சேர்ந்து நாங்க செயற்பட்டால்
சீர்திருத்தம் செய்திடலாம்.

மடுல்சீமை மைந்தன்,
(இரா.இலிங்கேஸ்வரன்)
கல்லுல்ல,
மடுல்சீமை,
பதுளை.

இதுவரை பெற்ற பரிசுகள் கௌரவங்கள் :

01. கலாபூஷணம் - கலாசார அலுவல்கள் அமைச்சு
02. முதல்வர் விருது (ஆய்வு) -கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு
03. கவிக்கோ விருது -கொங்குநாடு கலாசார ஒன்றியம், தமிழ்நாடு
04. சிறந்த கலைஞர் கௌரவம் - திருச்சி நுண்கலைக் கல்லூரி, தமிழகம்
05. அறநெறி விருது - கலாசார அமைச்சு
06. சாஹித்திய மண்டல விருது (மாணவர் பிரிவு)
07. சிறந்த ஆய்வாளர் விருது -மட்டக்களப்பு கலாசார பேரவை
08. மாநகர பௌர்ணமிக் கலைநிகழ்ச்சி அமைப்பாளர் சேவையின் பாராட்டு விழா - மட்டக்களப்பு இலக்கிய அமைப்புகள்
09. கவிதை இலக்கியத்திற்கான சாகித்திய விருது - வடக்குக் கிழக்கு மாகாண கல்விபண்பாட்டு அலுவல்கள் அமைச்சு
10. ஆய்வு இலக்கியத்திற்கான சாகித்திய விருது -வடக்குக் கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு
11. தேனகக் கலைச்சுடர் விருது - மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை

இலக்கிய உலகில் நன்றி கூறப்படவேண்டியவர்களாக பின்வருவோரை நினைவுபடுத்துகின்றார்.......

01. திரு. எஸ்.டி.சிவநாயகம்(முன்னாள் சுதந்திரன், வீரகேசரி, தினபதி,சிந்தாமணி ஆசிரியர்)
02. கவிஞர் மகாகவி - உருத்திரமூர்த்தி
03. கவிஞர் நீலாவணன்
04. பேராசிரியர் மௌனகுரு
05. திரு.எஸ்.எதிர்மன்னசிங்கம்
06. பெருங்கவிக்கோ மீரா
07. பெருங்கவிக்கோ சிற்பி
08. கவிஞர் தென்னவன்
09. கவிஞர் வளவன்

---

**கவிஞர்.மு.முருகேசு் எழுதும் வைறுக்கூ கோனார் இவ்விதழில் இடம்பெறவில்லை அடுத்த இதழில் உங்களைக் கவரும்....**


# கவனம்!

## பார்த்து நட

கட்டுச்சோறு கட்டிக்கிட்டு
காட்டுவழி போற மச்சான்
கிட்ட நானும் ஒட்டி வந்தா
இடந் தருவாயா - உந்தன்
கிட்ட நானும் ஒட்டி வந்தா
இடந்தருவாயா - மனசுக்குள்ள
இடந்தருவாயா?

பட்டப் பகல் வேளையிலே
பாட்டுக்கட்டி நான் படிக்க
கேட்டுக்கிட்டு நீயிருக்க
போய் வருவாயா - இல்லை
விட்டு விட்டு ஓடிநீயும்
போய் மறைவாயா?

பிட்டடனே வாள மீனு(க்)
கூட்டுவச்சி நான் தரவா
கட்டித்தயிர் சட்டியையே
ஒட்டுமொத்தமாய்த் தரவா
வெட்டி வேலை பாக்கிறாயே
கிட்ட வா மச்சான் - எனக்கு
சட்ட வாங்கிப் போட்டுத் தாலி
கட்ட வா மச்சான்.




எட்டுப் புள்ள பெத்துப் போடு
பட்டுப்போல நான் வளர்க்க
மாட்டு வண்டி கட்டிப் போடு
நாட்(டை)ட நாம சுத்திப் பார்க்க

சொட்டுச் சொட்டா உன்ன நானும்
சுட்டுக் கொன்று போடுவேன்டா
எட்டி எட்டி வேற பொண்ண- நீயும்
தொட்டுப் பார்த்தயண்டா!

மதன்

முகவரி தெரியாக் கவிஞர்களின் உள்ளத்து உணர்வுகள் இவை. பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், போன்ற இடங்களின் ஆங்காங்கே கிறுக்கிய பதிப்புரிமை பெறா படைப்புக்கள் இங்கே பதிப்பேறுகின்றன.....




என் மனசுக்குள் இருக்கும் பாசம்
என் மரணம் வரை உன்னோடு பேசும்
நல்ல நட்பின் நினைவுகளாக...

தேடிப்பார்க்க நான் உன்னைத்
தொலைக்கவும் இல்லை
விலாசம் கேட்க நான் உன்னை
மறக்கவும் இல்லை
நலம் விசாரிக்க நான் உன்னை
பிரியவும்இல்லை

இதயம் கூட
இடைவெளிவிட்டுத்தான் துடிக்கும்
ஆனால்
அந்த இடைவெளியில்கூட
நான் உன்னைப்பற்றித்தான்
நினைக்கிறேன்...

நாம் வாழும் வரை நம்மை யாரும்
வெறுக்கக்கூடாது...
நாம் மறைந்த பின்பு நம்மை யாரும்
மறக்கக் கூடாது...

# மட்டக்களப்பில் இடம்பெற்ற சுனாமி இரண்டாவது நினைவஞ்சலி

மட்டக்களப்பு..
வங்கக் கடலின் அலைக்கரத்தில்
வாவிமகள் கட்டிய அழகான தொட்டில்
செந்தமிழ்ப் பாட்டொலிக்கச்
சீதளத்துத் தென்றல்
வந்து வந்து மோதும்
வட்டு நிறைத்து மதாளித்த தெங்குகளோ
வான்பரப்பி நிற்கும்
பச்சை நிறைத்த பசிய வயற்பரப்பை
பார்த்தாலே இச்சையெழும்
கடலாட்சி அம்மனின் காலடியே தஞ்சமென
வாழ்ந்திருந்த மக்கள், எம்
மண்ணீந்த பெருங் கொடைகள்
சின்ன முனகலுக்குள் சிறகுகள் ஒடிந்து
கண்ணில் கரைந்து கனவாகிப்போய்
இன்றுடன் இரண்டு மண்ணின் ஆண்டுகள்
எழுநூற்று முப்பது நாட்கள் முற்றுகையிட்ட
அசுர இருள் அகலவில்லை இன்னும்
முத்தெடுக்கப்போய் முக்குளித்த கடலுக்குள்
மூச்சடங்கிப் போனதுபோல்,
முப்பது மணித்துளிக்குள்
பேச்சடங்கிப் போனீர்கள்□
எச்சத்தைக்கூட இன்றுவரை தேடுகின்றோம்
கடல் தாயே! உந்தனது காலடியில் கிடந்தவரை
கூண்டோடு கொண்டொளித்தாய்
கோபமிதா? தாபமிதா?
அலங்கோலமாக நீ வரைந்த கோடுகளில்
அழகிய சித்திரங்கள் அடியழிந்து போனதுவே!
சுனாமியே இன்று,
கடலின் கரைபார்த்து படிக்கட்டு மூலையில்
சாய்ந்து கிடப்போரும், திண்ணை ஓரத்தில்
ஓய்ந்து ஒடுங்கி உட்காந்திருப்போரும்
வேலைமறந்து வீடுவரத் துடிப்போரும்
உன் வரவுக்காக அல்ல
உன் வராமைக்காக!

**கவிஞர்.வெல்லவூர்க் கோபால்**

வேதமூர்த்தி எழுதும் 'நிறைமகள்" தொடர் அடுத்த இதழில் வெளிவரும்



# வாசகரிடமிருந்து கவிஞனுக்கு

.......... ஈழத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சியினைப் பொறுத்த வரை அதுவொரு தனித்துவமான போக்கினைக் கொண்டிருக்கிறது. ஆனாலும் வளர்ந்து வரும் படைப்பாளிகளிடம் அத்தகைய வளர்ச்சியையும் தனித்துவத்தையும் தேடுவது சாத்தியமில்லை. அதே வேளை நீண்ட காலமாக எழுதி வரும் பல மூத்த கவிதைப் படைப்பாளிகள், அன்றைய நாள் தொடக்கம் கவிதையைப் பற்றி கொண்டிருந்த கருத்து நிலையிலிருந்து (அந்த கருத்து நிலை இன்றைய கவிதைப் படைப்பாளிகள், கவிதைபற்றி கொண்டிருக்கும் கருத்து நிலையிலிருந்து முரண்பட்டதாக இருப்பினும், மாறாத நிலையில் இன்றும் எழுதிக் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அது சரியா பிழையா என்பது வேறு விடயம்.

இன்றைய நிலையில் கலை இலக்கியப் படைப்புகள் பன்முகத்தன்மைகள் கொண்டு படைக்கப்படுகின்றன. இதற்கு சமூகவியற் காரணங்கள் பல. .ஆனாலும் சமூகப்பிரக்ஞையுடனும் மனித குல நலனுக்காய் கலை இலக்கியம் படைக்கப்படுவதும் ஒரு போக்காகும். கவிஞன் இதழின் படைப்புகளின் தேர்வினை நோக்குமிடத்து கணிசமான அளவுக்கு சமூக அக்கறையுடன் மேற் கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிகிறது. இதுவொரு ஆரோக்கியமான போக்கு எனலாம்.

தொடர்ந்து கவிஞன் இத்தகைய தேர்வான படைப்புகளை வெளியிட்டு, தன்னை தக்க வைத்துக் கொள்ளவேண்டும் என்பதே என் வேண்டுகோள். வாழ்த்துக்கள்.

-மேமன் கவி-
memonkavi@yahoo.com

# சிவா மல்டி கொம்லக்ஸ்

பிரதான வீதி,புதுக்குடியிருப்பு. (பாடசாலைக்கு முன்னால்)

பாடசாலை உபகரணங்கள் மற்றும் பயிற்சிப் புத்தகங்கள் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான புதிய வெளியீடுகள் . போட்டோப் பிரதி லெமினேற்றிங் கொம்பியூட்டர் ப்பிரின்டிங் ஸ்கேனிங் Internet & E-Mail சேவை விளையாட்டுப் பொருட்கள்,பரிசுப்பொருட்கள், வாழ்த்தட்டைகள், புக் வைண்டிங்

**VCD, DVD Writing**

மற்றும் **Mobitel ,Dialog,Airtel Reload**

**Dialog, Mobitel, Suntel, SLT net, SLT Passport** போன்ற அனைத்து முற்கொடுப்பனவு அட்டைகளும் இங்கே பெற்றுக்கொள்ள முடியும்

தொடர்புகளுக்கு : 0770452861 , 0653641247

E- Mail : psnraj@yahoo.com




நகரும் நாட்களின் தொடரும் விடிவிற்காய் உங்கள் மனப்பதிவுகளை கவிஞன் எனும் காலக்கண்ணாடியில் தரவேற்றம் செய்து, உங்கள் ஆக்கங்களையும் காலத்தின் தேவையையும் கலையினூடாகப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

உங்கள் ஆக்கங்களை கீழுள்ள முகவரிக்கு அனுப்பி காலக்கண்ணாடியின் கோலப்புத்தகத்தில் நீங்களும் புள்ளி வையுங்கள்!

**அனைத்துத் தொடர்புகளுக்கும்:**

தபாலிட : "கவிஞன்"
கூட்டுறவுக் கடை வீதி,
புதுக்குடியிருப்பு
30158
இலங்கை.

உரையாட : 0773620328, 065 3650153

மின்னஞ்சலிட : kavignan@live.com

இணையத்தில் இணைய : www.kavignan.com

அனைத்து ஆக்கங்களுக்கும் படைப்பாளிகளே பொறுப்புடையவர்